MISSION PRESS 1840

# சர்வவியாபி

SARVAVIABI

29-07-2018 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | விளம்பி வருடம் ஆடி 13 | வருட சந்தா ₹ 150 தனிப்பிரதி ₹ 6

புத்தகம் 112 பக்கம் - 12 | இதழ் 29


e-mail:missionpress48@gmail.com
e-mail:missionpress48@yahoo.com
Ph: 0413/ 2334360
ஆசிரியர்:அருள்தந்தை C. அந்தோனி ரோச்


## ஓய்வை விட பிறர் மீது கொள்ளும் அக்கறை முதலிடம் பெறட்டும்

*நமது தேவைகளா, பிறரின் தேவைகளா என்ற கேள்வி எழும்போது பிறருக்கே முதலிடம் கொடுப்போம் - திருத்தந்தை.*

**இ**ஞ்ஞாயிறு வழங்கப்பட்ட திருப்பலி வாசகம் குறித்து நண்பகல் மூவேளை செப உரையில் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மற்றவர்களின் தேவைகள் நிறைவு செய்யப்பட நம்மிடமிருந்து பல தியாகங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன என்று கூறினார்.



பணி முடிந்து திரும்பிய சீடர்களுக்கு ஓய்வளிக்க விரும்பிய இயேசு, அதை நிறைவேற்ற முடியாமல், மக்கள் கூட்டத்திற்கு போதிக்க வேண்டிய கட்டாயத்தை எதிர்நோக்கியதை சுட்டிக்காட்டிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இத்தகைய நிகழ்வுகள் நம் வாழ்விலும் இடம் பெறுகின்றன, ஏனெனில் நம் திட்டங்களைவிட, மற்றவர்களுக்கு நாம் உதவ வேண்டியது அவசரமானதும், அவசியமானதும் என்றார். நற்செய்தி அறிவித்தலில் மூன்று வினைச் சொற்கள் முக்கியத்துவம் நிறைந்தவை என்பதைச் சுட்டிக்காட்டிய திருத்தந்தை, ஒரு மேய்ப்பரைப்போல் பார்ப்பது, இரக்கத்துடன் செயல்படுவது, கற்பிப்பது என்பனவற்றை எடுத்துரைத்தார். தன் சீடர்கள் ஓய்வெடுக்கச் செல்லும் நேரத்தில் தன்னைத் தேடிவந்த மக்கள் கூட்டத்தின் தேவைகளை அறிந்து, அவர்களை இதயத்தின் கண்கள் கொண்டு நோக்கிய இயேசு, அந்த மக்களுக்கு தான் வழங்கும் கொடையாக வார்த்தை எனும் அப்பத்தைத் தந்தார் என மேலும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ். ●

## மக்களின் மாண்பையும் உரிமையையும் மனதில் கொண்டு உழையுங்கள்

*புலம்பெயர்வோரின் படகுகள் கவிழ்ந்து உயிரிழப்புகள் ஏற்படுவது குறித்து திருத்தந்தை ஆழ்ந்த கவலை.*

**ம**த்திய தரைக் கடல் வழியாக புலம்பெயர்வோரை ஏற்றி வரும் படகுகள் விபத்துக்குள்ளாவதை தடுக்கும் நோக்கத்தில் அனைத்துலக சமூகத்தினர், உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என அழைப்பு விடுத்தார் திருத்தந்தை பிரான்சிஸ். இஞ்ஞாயிறு நண்பகல் மூவேளை செப உரையின் இறுதியில் இவ்வழைப்பை முன்வைத்த திருத்தந்தை, அனைத்து மக்களின் உரிமைகளையும், மாண்பையும், மனதில் கொண்டு, புலம்பெயர்வோரின் வாழ்வைப் பாதுகாக்க, அனைத்துலக சமூகம் முன்வர வேண்டும் என விண்ணப்பித்தார்.

அண்மையில், மத்தியதரைக் கடல் பகுதியில் இடம் பெற்ற விபத்துக்களால் உயிரிழந்தவர்கள் குறித்து தான் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளதாகவும், உயிரிழந்தவர்கள், மற்றும் அவர்களின் குடும்பங்களுக்காக, தான் செபிப்பதாகவும் கூறினார் திருத்தந்தை. இம்மாதம் 17ம் தேதி, 153 பேரை, ஆப்ரிக்காவிலிருந்து ஏற்றி வந்த படகு, கடலில் கவிழ்ந்ததில் ஒரு பெண்ணும், குழந்தையும் தண்ணீரில் மூழ்கி இறந்ததையும், இரண்டு நாட்களுக்குப் பின்னர், சிரியாவின் புலம்பெயர்ந்த மக்கள் ஏறத்தாழ 150 பேரை ஏற்றிவந்த படகு ஒன்று சைப்ரஸ் அருகே கவிழ்ந்ததில், 19 பேர் உயிரிழந்ததையும், 25 பேர் காணாமல் போனதையும் குறித்து மூவேளை செப உரையில் தன் கவலையை வெளியிட்டார் திருத்தந்தை பிரான்சிஸ். ●

## காலநிலை மாற்ற பாதிப்பைக் களைய தொடர்ந்து பணியாற்றுங்கள்

**அ**றிவியலாளர் குழு, சுற்றுச்சூழலை மதிப்பீடு செய்து வெளியிடும் அறிக்கைகள், வருங்காலத் தலைமுறைகளுக்கு, குப்பைகள், பாலைநிலங்கள் மற்றும் கழிவுகளையே நாம் விட்டுச்செல்வோம் என்ற கவலையை அதிகரித்து வருகின்றன என, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்களிடம் தெரிவித்தார். "இறைவா உமக்கே புகழ்" திருமடல் வெளியிடப்பட்டதன் மூன்றாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெற்ற பன்னாட்டு கருத்தரங்கில் கலந்துகொண்ட ஏறத்தாழ 300 பிரதிநிதிகளை, இவ்வெள்ளிக்கிழமையன்று திருப்பீடத்தில் சந்தித்து உரையாற்றிய திருத்தந்தை, பிரான்சிஸ் அவர்கள், இவர்கள் இந்தக் கருத்தரங்கில் கலந்து கொண்டதே, இப்பூமியைப் பாதுகாப்பதற்கு இருக்கும் ஆவலின் அடையாளமாக உள்ளது என்று கூறினார். நம் பூமியின் நிலைமை குறித்த கவலை, சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்குத் தெளிவான நடவடிக்கைகள் எடுப்பதில் வெளிப்படுத்தப்படும் என்ற தன் நம்பிக்கையைத் தெரிவித்த திருத்தந்தை, காலநிலை மாற்றத்தால் மோசமான விளைவுகள் மேலும் ஏற்படுவதைத் தடுக்கும் விதமாக, 2015ம் ஆண்டில் இடம்பெற்ற பாரிஸ் ஒப்பந்தத்தை அரசுகள் மதித்து நடக்குமாறும் வலியுறுத்தினார். வருகிற டிசம்பரில் போலந்து நாட்டின் Katowice நகரில் நடைபெறவிருக்கும் கார்பன் வெளியேற்றத்தைக் குறைப்பது குறித்த (COP24) உச்சி மாநாடு, பாரிஸ் ஒப்பந்தத்தை செயல்படுத்தும் பாதையில், ஒரு மைல்கல்லாக அமையும் என்ற நம்பிக்கையையும் தெரிவித்தார். காலநிலை மாற்றத்தைத் தடுப்பதற்கு உலக அளவில் எடுக்கப்படும் நடவடிக்கை குறித்து வருகிற செப்டம்பரில், சான் பிரான்சிஸ்கோவில் நடைபெறவிருக்கும் உலக மாநாடு பற்றியும் குறிப்பிட்ட திருத்தந்தை, காலநிலை மாற்ற பிரச்சனை மற்றும் அதற்குரிய தீர்வுக்கு, நிதி நிறுவனங்களும் முக்கிய பொறுப்பைக் கொண்டுள்ளன என்று கூறினார்.

ஆசிரியர் பேனா...

# கல்விக்கண் திறக்கும் ஆசிரியரும் ஒருவிதத்தில் பெற்றோரே

எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும். அகஇருள் அகற்றி அறிவொளி ஏற்றும் ஆசிரியரை இறைவனாக கண்டது தமிழுலகம். மாதா, பிதா, குரு, தெய்வம் -இந்த படிநிலை அனுபவத்தில் குருவை (ஆசிரியரை) பெற்றோருக்கு ஒருபடி மேலாகவும் இறைவனுக்கு ஒருபடி கீழாகவும், கடவுளுக்கும், மனிதனுக்கும் இடைப்பட்ட நிலையில் வைத்து பார்த்தது இந்த தமிழினம்.

முற்காலத்தில் குருகுல பள்ளி முறையில் ஆசிரியரே அனைத்து கல்வி கிளைகளின் களஞ்சியமாக திகழ்ந்தார். ஆசிரியர் விஞ்ஞானம், வரலாறு, இலக்கியம், சமயம், சார்ந்த அறிவு இயக்கத்தின் ஊற்றாக திகழ்ந்தார். மாணவர்கள் அவரிடமிருந்து அறிவுசார் வளர்ச்சி மட்டுமல்ல. மனித மாண்புகள், பண்பு நலன்கள், சமுக பொறுப்புகள், சமுக பற்றுகள் குடும்ப ஒழுக்கம், ஆகியனவற்றைப் பெற்றுக் கொண்டார்கள். ஆனால் அன்றைய சூழலில் வகுப்புவாத படிநிலையில் எல்லோருக்கும் அந்த கல்வி கிடைக்கவில்லை.

**அடுத்து வந்த "திண்ணைப் பள்ளிக் கூடங்கள்"** மேற் சொன்ன பண்புகளை கொண்டிருந்தாலும், குருகுல பள்ளி கொண்டிருந்த சுற்றுவட்டம் சமூகத்தில் விரிவானது. "அனைவருக்கும் கல்வி" என்ற தாகமும் ஏக்கமும் சமுதாயத்தில் உருவானது. தங்கள் பிள்ளைகளைப் படிக்க வைத்தால் நல்ல எதிர்காலம் அவர்களுக்கு உண்டு என்ற நம்பிக்கை சமூகங்களிடையே-குடும்பங்கள், பெற்றோர் களிடையே உருவானது.

**ஆங்கிலேயர் காலத்தில்** கல்வியானது முக்கியத்துவம் பெற்றாலும் கடைநிலை கிராமங்களுக்கு கல்வி எட்டாக் கனியானது. நாடு சுதந்திரம் பெற்ற பின்பு அந்தந்த மாநில அரசுகள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க துவங்கின.

கல்விக்கண் திறந்த கர்ம வீரர் காமராஜர் ஓர் சாலை, ஓர் சிலை வைப்பதைவிட, பள்ளிசாலை துவங்குவது சிறந்தது என கருதி செயல்பட்டது, அவரை கல்விக்கடவுள் நிலைக்கு உயர்த்தி நிறுத்தியது. மதிய உணவு திட்டம் கொண்டு வந்து பெற்றோரின் பளுவை குறைத்து, ஏழை மாணவர்களும் அடிதட்டு மக்களும் கல்வி பெற அவர் உழைத்ததை இந்த தமிழினம் இன்னும் மறக்கவில்லை.

**கல்வி கற்றால்தான் வாழ்வு,** கல்வி திறம்பட பயின்றால் தான் உயர்வு, உயர்நிலைக்குச் சென்றால் தான் வாழ்வின் சிரமங்களை சமாளிக்க இயலும் என்பது இன்றைய சூழல். எனவே பெற்றோர்களும் பெரியோர்களும் தங்கள் பிள்ளை களுக்கு தரமான கல்வி மற்றும் உயர்வான ஒழுக்கம் புகட்டும் பள்ளிகளில் இடம்பிடிக்க முயல்கிறார்கள். இன்றைய கால கட்டத்தில் அரசு நிதி ஒதுக்கி ஆசிரியர்களை பணியமர்த்தி, அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்தாலும், தனியார் பள்ளிகளில், மாணவர்கள் அலைமோதுவது அங்கு வழங்கப் படும் கல்வியுடன் இணைந்த, ஒழுக்க பயிற்சியாகும்; அவர்கள் மாணவர்பால் செலுத்தும் தனிபட்ட கவனமாகும்.

**அண்மையில் தமிழகத்தில்** திருவள்ளூர் மாவட்டம், வெள்ளியகரம் கிராமத்தில் அரசு பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர் ஒருவர் அகில இந்தியாவையே திரும்பி பார்க்க செய்துள்ளார். இளநிலை ஆங்கில இலக்கியம் (BA-Literature) பயின்று அங்கு பணிக்கு வந்த ஆசிரியர் திரு. **பகவான் தாமோதர்** ஆறு முதல் பத்து வரை உள்ள வகுப்புகளுக்கு மட்டுமல்லாமல், மூன்று முதல் ஐந்துவரை உள்ள மாணவர் களுக்கும் ஆங்கிலம் கற்பித்துள்ளார். அண்மையில் அவருக்கு பணியிட மாற்றம் இடம் பெற்ற பொழுது அந்த பள்ளி மாணவ மாணவியர் அத்தனை பேரும் "நாங்கள் உம்மை போக விடமாட்டோம்; இங்கேயே இருங்கள்" என்று வழிமறித்து கதறியது ஊடகங்களை ஆக்கிரமித்தது. தமிழகத்தில் மட்டுமல்ல இந்தியாவின் பல பகுதிகளில் ஆசிரியர்கள் மேல் ஊழல், பாலியல், ஒழுக்க சீரழிவு போன்ற குற்றச்சாட்டுகள் வந்துகொண்டு இருக்கின்ற வேளையில், மேற்சொன்ன பள்ளியில் நிகழ்ந்த சம்பவம் அனைத்து தரப்பினரையும் சிந்திக்க செய்துள்ளது. வெள்ளியகரத்தில் பெற்றோர்கள் முதற்கொண்டு பலபேர் திரு. பகவானின் பணியின் ஆர்வத்தையும் அர்ப்பணத்தையும், மாணவர் ஆசிரியர் உறவையும் பாராட்டி பேசியது முதல்நிலை ஊடகங்களும் இதழ்களும் குறிப்பிட்டு சொல்ல தவறவில்லை.

திரு. பகவான் தன் மாணவர்களுக்கு ஆசிரியராக மட்டுமல்ல தோழனாக, நண்பனாக, தந்தை தாயாக, சகோதரனாக இருப்பதை அந்த இளம் உள்ளங்கள் உணர்ந்தன. தனது திறமைக்கும் வாய்ப்புக்கும் ஏற்ப ஊடகங் களையும், தொடர்பு கருவிகளையும், தொழிநுட்பத்தையும் பயன்படுத்தி மாணவர்களை வெளியுலக சூழலுக்கு இட்டு சென்றுள்ளார்; வெளியுலக கண்டுபிடிப்புகளையும் அறிவு கூறுகளையும் ஒருவித "ஸ்மார்ட் வகுப்பறை" சூழல் உருவாக்கி வெளியுலகை மாணவர்களுக்கு கொண்டு வந்துள்ளார். பெற்றோர் பிள்ளைகளுக்கு இடையே நிகழும் இல்லத்து சூழலை பள்ளியில் உருவாக்கித் தந்துள்ளார். சுத்தம், அமைதி, ஒற்றுமை, பொறுப்பு, நாட்டுப்பற்று, எதிர்கால இலக்கு ஆகியவற்றை மாணவர்கள் உணரச் செய்துள்ளார். மாணவர்களை அவர்களது இல்லத்தில் சந்திக்கும் நடை முறையை கடைபிடித்ததால் மாணவர்களின் வாழ்சூழல், சமூக பின்னணி, பொருளாதார தாக்கம், பிள்ளைகளுடைய எதிர்கால ஏக்கம், பெற்றோர்களின் கனவுகள் ஆகியன வற்றை கருத்தில் கொண்டு அர்ப்பணத்துடன் பணியாற்றி உள்ளார். எனவேதான், ஒவ்வொரு மாணவரும் அவருடன் சூழ்நிலை உணர்வு, மற்றும் உறவு பந்தங்களை ஏற்படுத்திக் கொண்டார். மாணவர்களின், மற்றும் ஆசிரியர் பகவானின் இந்த உறவு அழுத்தத்தை புரிந்து கொண்ட அரசும் தற்காலிகமாக அவருடைய பணி இட மாற்றத்தை நிறுத்தியது. மாணவர்களின் ஆழ்ந்த அன்பையும் விசுவாசத் தையும், குரு பக்தியையும் பெரிதென கருதி கல்விதுறை அவருடைய பணியிட மாற்றத்தை ரத்து செய்து அப்பள்ளி யிலேயே தொடர்ந்து பணிசெய்ய உத்தரவிட்டுள்ளது.

**எத்தனை இடங்கள்** ஊர்கள் சுற்றி வந்தாலும்,பள்ளி பருவத்தில் நாம் பெறும் அனுபவங்களை நாம் மறப்பதில்லை. நாம் பள்ளியில் சேர்க்கப்பட்ட நாள், முதன் முதலில் கொடுக்கப் பெற்ற இடம், விரலை பிடித்து மணலில் எழுத கற்று கொடுத்த ஆசிரியர், முதன்முதலில் சிலேட்டில் எழுத பழக்கிய ஆசிரியர், முதல்முதலாக ஆங்கிலம் வாசிக்க சொல்லி கொடுத்த ஆசிரியர் - இப்படி பள்ளி சூழலில் நாம் பெற்ற முதல் அனுபவங்கள் நம் வாழ்வில் இடம் பெறுவது உண்மை. அன்றைய ஆசிரியர்கள் நமக்கு சொல்லி கொடுத்த பண்பாடு, பழக்க வழக்கம், விடா முயற்சி, தலைமை பண்பு ஆகியன இன்றும் நம் வாழ்விலும் செயலிலும் இழையோடி இருப்பதை எவரும் மறுக்க இயலாது. தொடக்க பள்ளி, மேல்நிலை பள்ளி, கல்லூரி அனைத்து நிலைகளிலும், நம் அறியாமை அகற்றி அறிவொளி ஏற்றியவர்கள் தெய்வங்களே. திரு. பகவான் போன்ற நல்ல ஆசிரியர்கள் இன்று அவசியம் தேவை. எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும். **கல்விக்கண் திறக்கும் ஆசிரியரும் - ஒரு விதத்தில் பெற்றோரே.** ●

வாரச் சிந்தனை

ஆண்டின் பொதுக்காலம் 18ஆம் ஞாயிறு (5-08-2018) விப.16:2-4, 12-15 எபே.4:17, 20-24 யோவா.6:24-35.

# “தலைமுறை தலைமுறையாய்”

அருள்திரு. P. லூர்து ஜெயராஜ்,
துணை முதல்வர், பெத்தி செமினேர் மேல்நிலைப்பள்ளி, புதுவை.



**செங்கடல் கடத்தல் மற்றும் மன்னா:** நம்முடைய வாழ்க்கையில் பல நிகழ்வுகள் நடைபெறுகின்றன. நாம் நிறைய அனுபவங்களை பெறுகின்றோம். ஒரு சில நிகழ்வுகள் நம்மால் மறக்கவே இயலாது. அதுபோல இஸ்ராயேல் மக்கள் வாழ்வில் நடந்த முக்கியமான இரண்டு நிகழ்வுகள் அவர்களால் எளிதாக மறக்க முடியாது. ஒன்று, அவர்கள் செங்கடலைக் கடந்தது. இரண்டாவது, மன்னா பொழியப் பட்டது இஸ்ராயேல் மக்கள் தங்களுடைய பிள்ளைகளுக் கும், தலைமுறைகளுக்கும் எதை சொல்ல மறந்தார்களோ இல்லையோ இந்த இரண்டையும் சொல்லிக் கொடுக்க மறக்கவில்லை. இயேசு ஐயாயிரம் பேருக்கு உணவளித்தார் என்று கடந்தவார நற்செய்தியில் தியானித்தோம். யூத மக்கள் பெரும்பாலும் ஏழைகளாக, ஆடு மேய்ப்பவர்களாக, மீன் பிடிப்பவர்களாக, விவசாயம் செய்பவர்களாகத்தான் இருந்தார்கள். இவ்வாறு இயேசுக் கூடவே சென்றால் நமக்கு உணவு கிடைக்கும், எந்த பிரச்சனையும் இருக்காது என்று அவரையே தொடர்ந்து சென்றார்கள், இயேசுவை அரசராக்கக்கூட பார்த்தார்கள். ஆனால் இயேசு, “நீங்கள் அரும் அடையாளங்களைக் கண்டதால் அல்ல, மாறாக அப்பங்களை வயிறார உண்டதால்தான் என்னைத் தேடுகிறீர்கள்” என்றார். உடனே அவர்கள் “நாங்கள் என்ன செய்ய வேண்டும்” என்று கேட்டார்கள். அதற்கு இயேசு, “கடவுள் அனுப்பியவரை நம்புவதே கடவுளுக்கேற்ற செயல்” என்றார். “எங்களுக்கு எதாவது அடையாளத்தை, புதுமையை செய்து காட்டுங்கள், நாங்கள் நம்புகிறோம். எங்கள் முன்னோர்கள்கூட அற்புதமாக மன்னாவைப் பெற்றனர். நீங்களும் அதேபோல் வானத்திலிருந்து புதுமை செய்யுங்கள்” என்றார்கள். இயேசு அவர்களிடம், “வானிலிருந்து மன்னாவை பொழிந்தவர் மோயீசன் அல்ல, மாறாக கடவுள்” அதுமட்டு மல்ல அந்த மன்னாவே நான்தான். நானே வாழ்வு தரும் உணவு, என்னிடம் வருபவர்க்கு பசியே இராது, என்னிடம் நம்பிக்கை கொள்வோர்க்கு தாகமே இராது என்றார்.

**இயேசுவே நிலைவாழ்வு:** இன்றைய நற்செய்தி வாசக மானது யோவான் நற்செய்தியிலிருந்து கொடுக்கப் பட்டுள்ளது. புனித யோவான் நற்செய்தியாளர், தான் இந்த நற்செய்தியை எழுதியதன் நோக்கத்தை தெளிவாக 20:31ல் குறிப்பிடுகின்றார். “இயேசுவே இறைமகனாகிய மெசியா என்று நீங்கள் நம்புவதற்கும், அவர் பெயரால் நீங்கள் நிலைவாழ்வு பெறவே இந்நூலில் எழுதப்பட்டுள்ளன” என்கிறார். இயேசுவை கண்டிராத இரண்டாம் தலைமுறையினருக்கு இந்நற் செய்தியை எழுதுகின்றார். அதுமட்டுமல்லாமல் புனித திருமுழுக்கு யோவான்தான் மெசியா என்று பலர் தவறான கொள்கைகளை பரப்பி வந்தனர். எனவே இயேசுவே மெசியா, அவரே இறைமகன் என்று சான்று பகரத்தான் அவர் எழுதினார். அதற்காக அவர் பயன்படுத்திய உருவகங்கள்தான், இயேசுவே வழி, ஒளி, வாழ்வு, உண்மை, இன்றைய நர்செய்தியில் வாசித்தோம். வாழ்வுதரும் உணவு, இன்றைய இரண்டாம் வாசகத்தில், புனித பவுல் அடிகளார் எபேசு நகர மக்களுக்கு எழுதிய மடலில், “நீங்கள் பிற இனத்தார் போல் வீணான எண்ணம் கொண்டு வாழாதீர்கள். இயேசுவைப் பற்றி கற்றறிந்து கேள்விப்பட்டதைபோல் அவரில் நம்பிக்கை கொண்டு அவரே நிலைவாழ்வு என்று வாழுங்கள்” என்கிறார்.

**இயேசுவே தேடலின் மையம்:** இறைவன் அளிக்க இருக்கும் விடுதலை வாழ்வை பற்றிக் கவலைப்படாமல் வயிறார கிடைத்த உணவைப் பற்றி மட்டுமே சிந்தித்தனர் அந்த யூதர்கள். உணவே வாழ்வின் நோக்கம் என்று எண்ணி, அதை மட்டுமே தேடிய மக்கள் கூட்டத்தினர் இவர்கள். இன்றைய நுகர்வு கலாச்சார வியாபாரிகளும் மனிதனின் மனங்களை புரிந்துகொண்டு அதை நிறைவு செய்வதற்கான வழி தங்களிடம் இருப்பதாக விளம்பரப்படுத்துகின்றனர். தங்களுடைய உற்பத்தி பொருட்களைப் பயன்படுத்தும் போது மக்கள் தேடும் மகிழ்ச்சி அவர்களைத் தேடி வரும் என்கின்றனர். மக்களும் இவற்றை நம்பி மதிமயங்கி யவர்களாக இப்பொருட்களின் பின்னால் போகின்றனர். மாறாக அழிந்து போகின்றவைகளுக்காக உழைத்து அவற்றைத் தேடாமல், நிலைவாழ்வு தரும் காரியங்களை மட்டுமே தேடச் சொல்கிறார் இயேசு. மகிழ்ச்சிக்கானத் தேடல் அழிந்து போகக்கூடிய உலகப் பொருட்களால் அல்ல; மாறாக இறைமகனாகிய தன்னால் மட்டுமே நிறைவு செய்யப்பட வல்லது என்பதை இன்றைய நற்செய்தியில் தெளிவாக எடுத்துரைக்கின்றார். எனவேதான் “இறைவா! உம்மில் அமைதியடையும் வரை, என் இதயம் அமைதியடைய வில்லை” என்று புனித அகுஸ்தினார் கூறுகின்றார். எனவே இயேசுவே நமது தேடலின் மையம் என்று அவரது சாயலையும் இயல்பையும் அணிந்துகொள்கின்ற போது நாம் நம்முடைய பிள்ளைகளுக்கு, வரும் தலைமுறைக்கு இயேசுவைக் கொடுக்க முடியும்.

**தலைமுறை தலைமுறையாய்:** இஸ்ராயேல் மக்கள் செங்கடலைக் கடந்தது, மன்னா பொழியப்பட்டது இவை இரண்டையும் தங்களுடைய பிள்ளைகளுக்கு தலைமுறை தலைமுறையாய் சொல்லிக் கொடுத்துக் கொண்டே வந்தார்கள். அதுபோல் குடும்பங்களில் உள்ள பெற்றோர்கள் இயேசுவே நம் நிலைவாழ்வு, அவரே நம் வாழ்வின் மையம் என்று நம்பிக்கைக் கொண்டு தங்களுடைய பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும், ஆன்மீகத்தில் வளர்க்க வேண்டும். கைப்பேசி, தொலைக்காட்சி, வாகனங்கள் மற்றும் நாம் பயன்படுத்தும் பொருட்களை புதியதாக வாங்கினோம் என்றால் அதை நான்கு பேருக்கு நாமே விளம்பரப்படுத்தி, அந்த பொருள் நன்றாக இருக்கிறது வாங்குங்கள் என்று பிறர்க்கு தெரிவிக்கின்றோம். அதுபோல நாமும் பிறர்க்கு இயேசுவை தலைமுறை தலைமுறையாய் கொண்டு செல்ல வேண்டும். குறிப்பாக இளம் தம்பதியினர் எந்த அளவிற்கு இறைநம்பிக்கையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று சிந்தித்து பார்க்க வேண்டும். ஜெபமாலை, குடும்ப செபம் போன்றவைகளை மாலை வேளையில் வீடுகளில் சொல் கின்றோமோ? பிள்ளைகள் பள்ளிகள், கல்லூரிகளிலிருந்து வந்தவுடனே தொலைக்காட்சிப் பெட்டி, கைப்பேசி என்று அவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து நேரத்தை வீணடித்துக் கொண்டிருக்கிறோமா? கலைமான் நீரோடையை ஆர்வமாய் தேடுவதுபோல் கடவுளை ஆர்வமாய் தேடுவோம். ஆண்டவர் எத்துணை இனியவர் என்று சுவைத்துப் பார்ப்போம். இயேசுவே நம் நிலைவாழ்வு, **அவரே நம் வாழ்வின் மையம் என்று தலைமுறை தலைமுறையாய் எடுத்துரைப்போம்.** “என்னிடம் வருப வருக்குப் பசியே இராது; என்னிடம் நம்பிக்கை கொண்டிருப் பவருக்கு என்றுமே தாகம் இராது” (யோவா.6:35).

**திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி:**

♦ “நாம் வாழும் ஒவ்வொருநாள் சூழலிலும், அனைவரோடும் இணைந்து அன்பு கலாச்சாரத்தைக் கட்டியெழுப்ப இயேசு நம்மை அழைக்கிறார்”



# இறங்கி வந்து நெருங்கி வந்த உறவு

ME

15

Sr.M.லில்லி மரி ME, புதுச்சேரி.

**நற்செய்தி வாசகம்:** இதுவரை மனிதர்கள் மூலமாக இறை தூதைக் கேட்டோம். இப்போது இறைவனே பேசுவதைக் கேட்கப் போகிறோம். இயேசுவினுடைய வாழ்வையும் வார்த்தையையும் கிறிஸ்துவே நமக்குச் சொல்லப் போகிறார்.

திருச்சபையின் தொடக்கக் காலத்தின் ஆரம்பத்திலேயே நற்செய்தி திருச்சபையில் இன்றியமையாத இடத்தைப் பெற்றிருந்தது. வேதகலாபனை காலத்தில் சுரங்கங்களில் திருப்பலி நிறைவேற்றப்பட்ட போதும்கூட நற்செய்தி வாசகம் திருப்பலியில் இடம் பெற்றது. கிறிஸ்து மனித மீட்புக்காக இறக்கப் போகிறார். அவரே நாம் ஒவ்வொருவருக்கும் நம்பிக்கை கொள்ளவும் வாழவும் கற்றுத்தரப் போகிறார். எனவே திருப்பலியின்போது நற்செய்தி வாசகம் மிக முக்கியம் வாய்ந்ததாகிறது. நூல் என்பது போதகரின் ஓர் அடையாளம் அல்லவா? புனித யோவான் கிறிசோஸ்தோம் **"நடுக்கமின்றி ஒரு நாளும் இந்நூலை என்னால் வாசிக்க முடியவில்லை"** என்று சொன்னார்.

பாடல் திருப்பலியில் தூபம், தீபங்கள் வாசக நூலின் அருகில் பயன்படுத்தப் படுகின்றன. சாதாரண திருப்பலியில் குரு தன் இரு கைகளையும் திரு நூலின் மீது வைத்து கண்களில் ஒற்றிக்கொள்கிறார். அதை முத்தமிடுகிறார். அதன் மீது சிலுவை அடையாளம் வரைகிறார். இவை எல்லாம் நற்செய்தியின் மீதுள்ள வணக்கத்தைக் குறிக்கிறது.

நற்செய்தியின் வாசகத்தை இறைமக்கள் நின்றுகொண்டு கேட்கிறார்கள். நற்செய்தியைக் குறித்து தாங்கள் வெட்கப் படவில்லை என்பதைக் காட்ட தங்கள் நெற்றியிலும் உதடு களின் மீதும் மார்பிலும் சிலுவை அடையாளம் வரைகின்றனர்.

ஆறாம் நூற்றாண்டிலிருந்தே நான்கு நற்செய்திகளில் இருந்து ஒரு குறிப்பிட்ட பகுதி ஒவ்வொரு திருப்பலிக்கும் தேர்ந்துகொள்ளப்பட்டது. அது வாசிக்கப்பட வேண்டும் என்பது திருப்பலியின் முக்கிய நோக்கம். மற்ற வாசகங்கள் அன்றைய நற்செய்தியோடு தொடர்புடையவை. இதில் முதன்மையான நேரம் கடவுளின் குரலையே கேட்கப் போகிறோம் என்னும் ஆவல்தான். இந்த வாசகம் முடிந்து மக்கள் "கிறிஸ்துவே மாட்சி உமக்கே" என்று அறிக்கையிட்டபின் மறையுரையைக் கேட்க மக்கள் அமருகின்றனர். அந்த மறையுரை வாசகங்களின் விளக்க உரையாக போதனை அமைய வேண்டும். இறைமக்களின் இதயங்களில் நமது போதகரான இயேசுவின் வார்த்தைகள் நுழைய வேண்டும்.

கிறிஸ்து உன்னிடம் பேசுகிறார். அவருக்குச் செவி கொடு. இதோ அவருடைய புனித வாழ்வும் புதிய போதனையும் இணைந்த ஒன்று. அவர் தூய ஆவியாரால் கருவுற்று கன்னி மரியிடமிருந்து பிறந்தார். மாட்டுத் தொழுவத்தில் பிறந்தவர். தாழ்ச்சியையும் கடவுளிடம் கையளித்தலையும் போதிக்கிறார். அவர் உழைப்பாளியின் மகன். அவருடைய கைகள் சுத்தியலைப் பிடித்தன.

அவர் கலிலேயாவின் குன்றுகளின் மீதும் திபேரியாக் கடற்கரைகளிலும் போதித்தார். அவரே நூற்றுவர் தலைவனின் அடிமையைக் குணப்படுத்தியவர். வெகுண்டெழுந்த காற்றின் சீற்றத்தை அடக்கியவர். இலாசரைக் கல்லறையிலிருந்து உயிருடன் எழுப்பியவர். அவர் தன்னை உத்தம மனிதராகவும் மனிதனுக்கு முன் மாதிரியாகவும் காட்டியவர். தந்தையின் சரியான சாயலானவர். அவர் மக்களுக்குத் தங்களையே அன்பு செய்யவும் பிறரையும் அன்பு செய்யவும் கற்றுத் தந்தவர்.

பகைவர்களை மன்னிக்கவும் அவர்களைச் சகோதரராக ஏற்று அன்பு செய்யவும் சொன்னவர். அன்பு, உண்மை, நீதி இவை உயிரினும் மேலானவை என்று காட்டியவர்.



**அவருக்குச் செவிகொடு!** பகைமையால் நசுக்கப்பட்டு, துரோகம் செய்யப்பட்டு, காட்டிக் கொடுக்கப் பட்டு, எல்லோராலும் கைவிடப் பட்டவர். தன்னைச் சூழ்ந்திருந்தவர்கள் பல்லை நர நரவென்று கடித்து அவரை வெறுத்தபோதும் அவர்களோடு உறவை முறித்துக் கொள்ளாதவர். நாமெல்லாம் இறப்பதுபோல அவரும் இறந்தார். ஆனால் உன்னைவிடவும் வேறு எவரையும் விடவும் கொடிய வேதனைப்பட்டு இறந்தார். எனவே அவருடைய முன்மாதிரியால் இறப்பு உயிர்ப்பின் வெற்றியால் தோற்கடிக்கப்பட்டு அவரால் நாம் மீட்கப்படுவோம் என்று அவர் நமக்கு வாக்களித்துள்ளார்.

**அவருக்குச் செவிகொடு!**

**நமது நம்பிக்கையின் விதி:** மறையுரைக்குப் பின் இறைமக்கள் அனைவரும் நம்பிக்கை அறிக்கையிடுகின்றனர். அதாவது சற்று முன் நற்செய்தியிலும் மறையுரையிலும் எனக்குப் போதிக்கப்பட்டவைகளை ஏற்று நம்புகிறேன் என்று பொருள்.

கிறிஸ்தவத்தின் தொடக்கக் காலத்திலிருந்தே திருமுழுக்கு பெற நம்பிக்கை அறிக்கை வலியுறுத்தப்பட்டது. இந்த அறிக்கை மிக எளிமையானது. எத்தியோப்பிய அரச அலுவலர் பிலிப்புவிடம் "நான் திருமுழுக்குப் பெற ஏதாவது தடை உண்டா? என்று கேட்டார். அதற்குப் பிலிப்பு "நீர் முழு உள்ளத்தோடு நம்பினால் தடையில்லை" என்றார். (தி.ப. 3:37)

ஆனால் பல்வேறு கால கட்டங்களில் கிறிஸ்தவ நம்பிக்கை சில தப்பறையான கொள்கைகளோடு போராட வேண்டியிருந்தது. சுருக்கமான நம்பிக்கை அறிக்கை நமது நம்பிக்கையை வெளிப்படுத்த போதுமானதாக இருந்தது.

அந்தத் திருத்தூதர்களின் நம்பிக்கை அறிக்கை எளிதானதாகவும் தூய்மையானதாகவும் இருந்தது. ஆனால் நான்காம் நூற்றாண்டில் பெரும் தப்பறையான கொள்கைகள் எழுந்தபோது அது போதுமானதாக இல்லை. அதாவது கிறிஸ்துவின் இயல்பு பற்றியும் இறைவனின் மூன்று ஆட்தன்மை பற்றியும் தப்பறையான போதனைகள் எழுந்தன. இதனால் மக்களிடையே குழப்பம் உண்டாயிற்று. எனவே கி.பி.325-இல் நிசேவில் நடைபெற்ற பொதுச்சங்கமும் கி.பி. 381-இல் கான்ஸ்டான்டிநோபிள்-இல் நடைபெற்ற பொதுச்சங்கமும் அந்தத் தப்பறைகளுக்கு எதிராகப் புதிய நம்பிக்கை அறிக்கையை இயற்றின. அந்தியோக்கியாவிலும் கான்ஸ்டான்டிநோபிள்-இலும் இந்த நம்பிக்கை அறிக்கையைத் திருப்பலியில் சேர்ப்பது என்று முடிவு செய்யப்பட்டது. பின்னர் இந்த முடிவு ஸ்பெயின், ப்ரான்ஸ், ஜெர்மன் போன்ற நாடுகளுக்குப் பரவியது. பின்னர் இது ஞாயிறு திருப்பலியிலும் திருவிழா நாட்களிலும் மட்டும் சொல்லப்பட்டது.

மனுவான வார்த்தையானவர் நற்செய்தியில் மக்களிடம் பேசினார். அவர் பீடத்தின் மீது பலியாகப் போகிறார். நான் நம்பிக்கை அறிக்கையைச் சொல்லும் ஒவ்வொரு முறையும் என்னுடைய திருமுழுக்கைப் புதுப்பிக்கிறேன். இந்த உறுதிப்பாட்டை வெளிப்படுத்த நின்றுகொண்டு சொல்கிறேன். இந்த வார்த்தைகளால் திரு அவை என்னை ஏற்றுக்கொள்கிறது. தூய ஆவியாரின் ஒளியைத் தருகிறது. - தொடரும்


## மணமகன் தேவை

R.C / வயது 29 / படிப்பு - MBBS / பணி - பொதுத்துறை நிறுவனத்தில் மருத்துவர் (ஒப்பந்த அடிப்படை)

இந்த மணமகளுக்கு நல்ல கிறித்துவ குடும்பத்தைச் சார்ந்த தகுதி வாய்ந்த நல்ல மணமகன் தேவை.

தொடர்பிற்கு: 9442506509 / 9486875215



# மறைமாநில மாமன்றம் மலர்க புதிய கண்ணோட்டம்

– சுவாமி ஆ. லூயிஸ்.

“**க**ண்டதே காட்சி கொண்டதே கோலம்”, என வாழ்பவர் உண்டு. ஊனக் கண்களால் காண்பதில் முழு மெய்மையும் இருக்க வாய்ப்பில்லை. புத்தியினால் பார்ப்பது கண் பார்வையைவிட கொஞ்சம் மேலானது, இருப்பினும் அளவுள்ளது, விசுவாசக் கண்களோடு பார்ப்பது மேலானது. ஆனால் யாரும் கடவுளைப் போல காண முடியாது. இப்போது மங்கலாகக் காண்கிறோம், பிறகு நேர்முகமாகக் காண்போம். இந்நிலையில் திருச்சபை அதிகாரப்பூர்வமாகக் கொடுக்கும் பார்வையை திருச்சபையினர் ஏற்பது மிகவும் முக்கியம். அப்போதுதான் திருச்சபை ஒரே உள்ளமும் ஒரே உடலும் உள்ளதாக விளங்க முடியும். இவ்வாறு நாம் ஒன்றித்திருப்பது மிகவும் பாராட்டுக்குரியது. இருப்பினும் ஒரு சிலர் வித்தியாசமாகப் பார்ப்பார்கள், பரவாயில்லை, அவர்களின் பார்வையிலும் இருக்கும் மெய்மையை ஏற்றுக்கொள்வோம்.

**புதியப் பார்வை:** “இதோ, நான் அனைத்தையும் புதியது ஆக்குகிறேன்” பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்று இருப்பது போல பழைய கண்ணோட்டம், புதிய கண்ணோட்டம் என்று நமது வாழ்வில் வலம் வருகிறது. பாவம் பிரிக்கின்றது, புண்ணியம் பிணைக்கின்றது. சுயநலம் பிளவுபடுத்துகிறது. பொதுநலம் அரவணைக்கிறது. உலகம் திருச்சபை என்ற அமைப்புகளையும், கடவுள் மனிதன் என்ற ஆட்களையும் பிரித்துப் பார்ப்பது, பலவீனமாகப் பார்ப்பது. முரணாகப் பார்ப்பது பழைய கண்ணோட்டம். இந்நான்கு மெய்மைகளையும் இணைத்துப் பார்ப்பது புதிய கண்ணோட்டம். “இன்றைய உலகில் திருச்சபை” என்ற கொள்கைத் திரட்டைப் புரட்டினால் இது நன்கு புலப்படும். திருச்சபையின் போதனைப்படி பார்ப்போம், நம்புவோம்.

பாவம் நமது படைப்பு, மற்றவை எல்லாம் இறைவனின் படைப்பு. பாவத்தைத் தவிர மற்றதெல்லாம் என்றுமே நல்லது, புனிதமானது, உண்மையானது. ஒருமையானது என்பது நமது நம்பிக்கையாகும். சுயதரிசனம் பெறுகின்றவர்கள் அனைத்தையும் நல்லது என்று காண்பர். விசுவாசப் பார்வையே இறைவனின் பார்வையாகும், இதில் வளர்வோம்.

**புலன்களின் பார்வை:** படைப்பின் மூலக்கூறுகள் ஐந்தையும், ஐம்புலன்களாக கடவுள் மிகவும் நேர்த்தியாகப் பதிய வைத்து வருகிறார். பார்ப்பது, கேட்பது, பேசுவது, நுகர்வது, தொடுவது வழியாக படைப்பின் செய்திகள் நம்மில் பதிய வைக்கப்படுகின்றன. ஐந்து புலன்களையும் மனித நேயத்தோடு பயன்படுத்துவது முக்கியம். கிறிஸ்தவ நேயத்தோடு, அர்ப்பண நேயத்தோடு ஐம்புலன்களையும் பயன்படுத்த அன்னை மரியாள், ஆண்டவர் இயேசு கடவுள் கொடுத்த மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். அவர்களைப் போல பார்க்க பழகிக் கொள்வோம், வேண்டுவோம்.

**புத்தியின் பார்வை:** புலன்கள் ஐந்தையும் நெறிப்படுத்த, தேர்ந்தெடுக்க நல்வழிப்படுத்த நமக்குக் கடவுள் புத்தியையும், பிரியத்தையும் நமக்கு வழங்கி வருகிறார். சரியான முழுமையான முறையில் பயன்படுத்துவோம். இங்குதான் விழிப்புணர்வு நம் அனைவருக்கும் தேவைப்படுகிறது. எத்தனை தலைகளோ அத்தனை சிந்தனைகளை உணர்வோம். ஒவ்வொருவரும் தங்களின் திறமைக்கு ஏற்ப ஒரே மெய்மையை பல கோணங்களில் கண்டு விமரிசனம் செய்வர். அனைத்தையும் மதித்து அதில் உள்ள மெய்மையை எடுத்துக்கொண்டு மெய்மையின் நிறைவை நோக்கி பயணிப்போம்.

**பக்தியின் பார்வை:** ஒவ்வொருவரிடமும் ஞானத் திறன் உள்ளது. கடவுளின் தூண்டுதல் துணையோடு பார்க்கும் போது புலன்கள், புத்தி, பக்தி என மூன்றும் சங்கமம் ஆகிறது. கடவுளைப் போல பார்க்க ஆரம்பிக்கின்றோம். இங்கும் பல்வேறு நிலைகளில் பக்தியைப் புரிந்து, பார்வையையும் உணர்ந்து ஒருங்கிணைப்போம். இவண் பல் சமயங்கள் இருப்பதையும் உணர்ந்து ஏற்போம். ஒப்பிடாது ஒருங்கிணைப்பதே மேலானது. மெய்மையைப் பற்றிக் கொண்டு, மற்றதை விட்டுவிடுவோம்.

**கடவுளின் பார்வை:** கடவுளின் பார்வை முழுமையானது, நிறைவானது, முடிவானது ஆனால் அவரின் பார்வையை யாரும் முழுமையாக அவரைப் போல பார்க்க இயலாவிட்டாலும், அனைத்தையும் ஒருங்கிணைத்து நமது பார்வையை பரவலாக்குவோம், ஆழமாக்குவோம், ஆழத்தில் தான் முழுமையை நாம் உணர முடியும்.

படைப்பை நல்லதென கண்டு வருகிறார். ஆண், பெண் இவர்களை மிகவும் நல்லதென கண்டு வருகிறார்.கடவுளின் இருப்பும், செயல்பாடும் கடந்தகாலம், வருங்காலம் என்று இல்லாமல், எப்போதும் இப்போதுதான், நிகழ்காலம் தான் என்பதை காலத்தினால் கட்டுப்பட்டு வரும் மனித குலம் உணர்வது மிகவும் முக்கியம்.

கடவுள் படைப்பிலும், மனித குலத்திலும் தம்மையே தரிசிக்கின்றார், ஆசீர்வதிக்கின்றார், நிபந்தனையின்றி தொடர்ந்து அவருடைய பிரசன்னம் தொடர்கிறது. மனிதர்களுடைய பார்வை கடவுளின் பார்வையை நெருங்கி வருவதற்கு ஆவியால் இயக்கப்பட வேண்டும். அதனால் அவருடைய வார்த்தை வடிவத்தைக் காண இயலும். ஆவியும் வார்த்தையும் இணைந்து காணப்படும் போது, அங்கே இறைவனுடைய சாயல் காட்சி அளிக்கின்றது. நாம் நிரந்தரமாக ஆவியால் வழிநடத்தப்படும் போது, நமது பார்வையும் நிரந்தமானதை சுவைக்கும்; தற்காலிகம் என்றால் தற்காலிகத்தை சந்திக்கும் என்பதையும் உணர்வோம். கடவுளின் பார்வையை பதிய வைத்திருப்பது அனைத்து சமய நூற்களாகும், இயற்கையாகும், படைப்பில் இடம் பெறும் அனைத்து நிகழ்வுகளாகும். அனைத்திலும் அவருடைய ஈடுபாட்டை உணர்ந்தால் நமக்குப் பார்வையும் தெளிவாகும், உறவும் பலமாகும். ஊனக் கண்களையும், அளவுள்ள அறிவுக்கண்களையும் கடந்து நம்பிக்கையின் கண்களோடு காண நாம் ஆரம்பித்துவிட்டால், இறை ஆட்சி இதயத்திலும், இல்லத்திலும் மலர ஆரம்பித்துவிட்டது என்று அக மகிழ்வோம், பகிர்ந்து கொள்வோம், அவர்முன் நடனமாடுவோம், தொடர்ந்து சாட்சிய வாழ்வைத் தொடர்வோம். ●

**வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு :** சர்வவியாபி இதழில் மரித்தோர் நினைவு செபம் பதிவு செய்ய விரும்புவோர் குறைந்தது பத்து நாட்களுக்கு முன்பதிவு செய்து கொள்ள வேண்டுகிறோம்.

**2018-2019** சர்வவியாபி சந்தாவை புதுப்பித்துக் கொள்ளவும். MO செய்பவர்கள் **சந்தா எண்ணை** தவறாமல் குறிப்பிடவும். - ஆசிரியர்.



# நிரம்பி வழியும் வாழ்க்கை

–Dr. அ. மதலைமுத்து, புதுவை–3.

**காரணமென்ன?:** கடவுளின் திருமகன், இயேசு கிறிஸ்துவாக மனித குலத்தை மீட்பதற்காக அவதரித்தார். மெசியாவின் பிறப்பிற்கான இந்த தெய்வீகக் காரணம், பல துணை காரணங்களை உள்ளடக்கியதாக உள்ளது. நாம் அவைகளை அறியாமல், காரணரான இயேசுவை, மற்றும் அவருடைய அரும் பணிகளை புரிந்துகொள்ள முடியாது.அவைகள் தெரிந்தால்தான், விசுவாசிகளான நாம், எதற்காக, எவ்வாறு, எதிர்வினையாற்ற வேண்டும் என்று விளங்கும். பல மறை நூல் வாசகங்கள் இயேசுவின் உலக வாழ்க்கைக்கான காரணங்களை சுட்டி காட்டுகின்றன.

**மறைநூல் சான்றுகள்:** இயேசு, "திருசட்டத்தையோ இறை வாக்குகளையோ நான் அழிக்க வந்தேன் என நீங்கள் எண்ண வேண்டாம்; அவற்றை அழிப்பதற்கல்ல. நிறைவேற்றுவதற்கே வந்தேன்" என்றார் (மத்.5:17). "இவ்வாறே மானிட மகனும் தொண்டு ஏற்பதற்கு அல்ல, தொண்டு ஆற்றுவதற்கும் பலருடைய மீட்புக்குத் தம் உயிரைக் கொடுப்பதற்கும் வந்தார்" (மத்.20:28) "இழந்து போனதைத் (ஆன்மாக்களை) தேடி மீட்கவே மானிட மகன் வந்திருக்கிறார்" (லூக்.19:10). இயேசு, "ஏனெனில் என் சொந்த விருப்பத்தை நிறைவேற்ற அல்ல, என்னை அனுப்பியவரின் விருப்பத்தை நிறைவேற்றவே நான் விண்ணகத்திலிருந்து இறங்கி வந்தேன்" என்றார். (யோவா.6:38) "உண்மையை எடுத்துரைப்பதே என் பணி, இதற்காகவே உலகிற்கு வந்தேன். உண்மையைச் சார்ந்தவர் அனைவரும் என் குரலுக்கு செவி சாய்க்கின்றனர்" (யோவா.18:37) நாம் அவருடைய குரலுக்கு செவிசாய்க்கிறோமா? உண்மைகளை அறிந்து அதன்படி வாழுகிறோமா?

**நிறைவான வாழ்வு:** குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு திருவாசகமும் கிறிஸ்து, மற்றும் அவருடைய திருப்பணிகளின் எண்ணிலா விழுமியங்களை சொல்லுகின்றன. ஆண்டவர் மேலும், "நான் ஆடுகள் (விசுவாசிகள்) வாழ்வை பெறும் பொருட்டு, அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்துள்ளேன்" என்றும் கூறினார். 'நல்ல ஆயன்' உதாரண மறை உரையை இயேசு விளக்கிய பொழுது, அவர், "அவை வாழ்வை நிறைவாகப் பெறும் பொருட்டு" என்று கூறுவது, "அவைகளின் தேவைக்கும், தரத்திலும் அளவிலும் தேவைக்கு அதிகமாகவும் பெறும்" என்று பொருளாகும்.

**கிறிஸ்துவில் நிறைவு:** கடவுள் வழங்கும் ஆசீர்வாதங்கள் என்று நாம் பட்டியலிடுகிற பொழுது, பொதுவாக பொருள், மகிழ்ச்சி, மற்றும் சவுகரியத்தைத் தருகிற வீடு, வாகனம், கல்வி பட்டம், வேலை, பணம், நகை போன்ற சில பொருட்களையே குறிப்பிடுகிறோம். சாத்தான், நம் மனதில் ஆசீர்வாதங்கள் பற்றி இத்தகைய தவறான கருத்தியலை உருவாக்கியிருக்கிறான். "கடவுள் வீடு தந்தாரா? பணம் தந்தாரா?" என்று கேட்டு, நம்மை குழப்புகிறான். பிறந்த நாள் பரிசு, கைபேசி போன்ற பொருட்களே கடவுள் தர எண்ணும் ஆசீர்வாதங்கள் என்று சாத்தான், ஆண்டவரின் ஆசீர்வாதங்களுக்கு வேலியிடுகிறான். உடமைகள், மற்றும் உலகியலான தேவைகள், "கேட்பதெல்லாம் தருவார்", உடல் நலம், வெற்றி மற்றும் செல்வ செழிப்பு கொண்டது நிறைவான வாழ்க்கையை என்று சிலர் விவரிக்கிறார்கள். ஆனால், கிறிஸ்துவில் வாழ்ந்து பெறும் ஆன்மிக ஆசீர்வாதங்கள் பல உள்ளன. "அவர் (தந்தையாம் கடவுள்) (உண்மை,அன்பு, நீதி, இறை உறவு, அமைதி போன்ற) விண்ணகம் சார்ந்த, (ஞானம், திடம், நேர்மை, நம்பிக்கை, மனமாற்றம், தெய்வ பயம், மகிழ்ச்சி போன்ற) ஆவிக்குரிய ஆசி அனைத்தையும் கிறிஸ்து வழியாக நம்மீது பொழிந்துள்ளார் (எபே.1:3). ஆகவே, கிறிஸ்து நிறைவான ஆன்மிக வாழ்க்கையை வழங்க வந்தார். நாம் அதைப் பெற முனைப்பு காட்டுகிறோமா?

**நிறைவான இரக்கம்:** கடவுளின் தாராளமான இரக்கம் நமக்கு நிறைவான வாழ்க்கையைத் தருகிறது. நாம் தவறு செய்தவர்கள், தண்டனைக்குத் தகுதியானவர்கள். ஆனால், கடவுள் தண்டிப்பதில்லை, இரக்கம் காட்டுகிறார், மன்னிக்கிறார். இன்னொரு வாய்ப்பைத் தருகிறார். "அவர் (கடவுள்) தம் பேரிரக்கத்தின்படி இறந்த இயேசு கிறிஸ்துவை உயிர்த்தெழச் செய்து (நம் பாவங்களைக் கழுவி) நமக்கு புது பிறப்பளித்துள்ளார்" (1பேதுரு.1:3). நாம் பாவத்தால் இறந்ததால், கடவுளிடமிருந்து பிரிக்கப்பட்டோம். அனனியா, சப்பீராவை கொன்றதைப் போல, நம்மை உடனே கொன்றுவிட கடவுளுக்கு எல்லா உரிமையும் உள்ளது. கடவுள், நாம் மனம் மாற வேண்டுமென்றே நம்மை மன்னிக்கிறார். அதாவது, "கொடியவர் தம் வழிமுறையையும், தீயவர் தம் எண்ணங்களையும் விட்டுவிடுவார்களாக! அவர்கள் ஆண்டவரிடம் திரும்பி வரட்டும்" (எசா.55:7).

**கடவுளின் திருவருள்:** கடவுள் தாராளமாக தம் அருளை நம்மீது பொழிகிறார். இது நம் வாழ்க்கையை நிறைவு செய்கிறது. அருள் என்பது தகுதி இல்லாத போதும் நாம் கடவுளிடமிருந்து பெறும் ஆசீர்வாதமாகும். எசாயா, கடவுளின் மன்னிக்கும் தன்மையை இதற்கு உதாரணமாகக் கூறுகிறார். கடவுள் இயேசு வழியாக வழங்கிய மீட்பும் அதைப் போன்றதே. "மேலும் ஒருவர் குற்றத்தாலே, அந்த ஒருவர் வழியாகச் சாவு ஆட்சி செலுத்தினதென்றால் அருள் பெருக்கையும் கடவுளுக்கு ஏற்புடையவராகும் கொடையையும் இயேசு கிறிஸ்து எனும் ஒருவர் வழியாக அடைந்து கொண்டார்கள். வாழ்வு பெற்று ஆட்சி செலுத்துவார்கள்" (உரோ.5:17) (எபே.2:4-9) கடவுளின் இரக்கம் என்றும் வற்றிப்போகாது. இயேசுவின் உயிர் தியாகம் நமக்கு போதுமானதும் தாராளமானதும் ஆகும் (எபி.7:25). நண்பர்களே! ●

---

86 இளம் உள்ளங்களுக்கு

# கீழே விழுவது எழுவதற்கே

– B.மேரி ராபர்ட் சாந்திதாஸ், புதுவை–1.



**தடைக் கல்:** அருணிமா சின்கா சிறுவயதிலிருந்தே விளையாட்டில் ஆர்வம் கொண்டவர், சட்டம் பயின்றவர். கைப்பந்து விளையாட்டில் மத்திய அரசு பணிக்காக தேர்வு எழுத தொடர்வண்டியில் ஏறினார். ஓடும் ரெயிலில் திடீரென்று கொள்ளையரால் தாக்கப்பட்டார். அவர் தன்னுடைய பொருள்களைப் பாதுகாக்க அவர்களுடன் போராடினார். கோபங்கொண்ட கொள்ளையர் ஓடும் ரெயிலிலிருந்து அவரை தூக்கி வெளியே வீசினர். அப்போது பக்கத்து தண்டவாளத்தில் வந்த ரெயிலில் அவரது இடது கால் சிக்கி நொறுங்கியது. அவர் வலியால் துடித்தார். உடல் வலி ஒருபுறம், வேலைக்கான தேர்வு எழுத முடியாமல் போய்விட்டதே என்ற கவலை மறுபுறம்.

**தடைகள்:** அவரை கொண்டுபோய் மருத்துவமனையில் சேர்த்தார்கள். மருத்துவர்கள் வேறு வழியில்லாமல் அவருடைய இடது காலை எடுத்துவிட்டார்கள். மனதளவில் அவர் முழுவதுமாக நொறுங்கிப் போனார். அவருடைய துன்பத்தை அதிகரிக்கும் வண்ணம் பத்திரிகையில் அவரை பற்றி செய்தி திரித்து கூறப்பட்டிருந்தது. அவருக்கு மூளைக் கோளாறு என்றும் அதனால் மனமுடைந்து அவர் ஓடும் ரெயிலிலிருந்து குதித்து தற்கொலைக்கு முயன்றதாக, அவதூறாகப் போடப்பட்டிருந்தது.

**புதுமுயற்சி:** அருணிமா துவண்டுவிடவில்லை. தன்னை யாரும் பரிதாபத்துடன் நோக்குவதை அவர் விரும்பவில்லை. மருத்துவமனையில் சிகிச்சை முடிந்து வெளியேறியதும் தனது தகுதியை உலகிற்கு வெளிப்படுத்த உறுதி கொண்டார். இதற்காக மலையேறும் பயிற்சி மேற்கொள்ள ஆரம்பித்தார். மூன்று ஆண்டுகள் கடுமையான பயிற்சி மேற்கொண்டார். அவர் முயற்சியில் தளரவில்லை. ஒரு காலை இழந்த பெண்மணி 52 நாட்களில் எவரெஸ்ட் சிகரத்தை ஏறி வென்றார் என்ற பெருமையை உலகிற்கு நிலைநாட்டினார்.

**விழுவதும் எழுவதும்:** வாழ்க்கையில் நாம் விழுவது சகஜம். ஆனால் எழுவது அவசியம். ஒவ்வொரு முறையும் கீழே விழும்போதும் எழுவதில்தான் நம் பெருமை இருக்கிறது. விழுவது எழுவதற்கே!

**இயேசு தரும் பாடம்:** கல்வாரி நோக்கி சிலுவை சுமந்து சென்ற இயேசு விழுந்த போதெல்லாம் எழுந்தார். கல்லறையில் அடைக்கப்பட்ட மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து வெற்றியுடன் வெளியே வந்தார். வாழ்வில் விழுவது எழுவதற்கே என்ற நம்பிக்கை பெறுவோம். ●

**தம்மால் முன்பே தேர்ந்துகொள்ளப்பட்டவர்கள் தம் மகனின் சாயலுக்கேற்றவாறு இருக்க வேண்டுமெனக் கடவுள் முன்குறித்து வைத்தார். (உரோ.8:29)**



# புனித வனத்துச் சின்னப்பர் திருத்தலம்
## 117-ஆம் ஆண்டு பெருவிழா - 2018
### கல்பட்டு

**கொடியேற்றம்: 31-07-2018 செவ்வாய்**
**காலை 8.00 திருப்பலி**
பேரருட்திரு. A.**அருளானந்தம்** VG
புதுவை-கடலூர் உயர் மறைமாவட்டம்.

**பெருவிழா: 8-8-2018 புதன்**
**காலை 5.30 திருப்பலி**
**காலை 8.00 கூட்டுத்திருப்பலி**
**மேதகு பேராயர் அந்தோனி ஆனந்தராயர்**
புதுவை-கடலூர் உயர் மறைமாவட்டம்.

**08-08-2018 புதன் மாலை 6.00 திருப்பலி, இரவு 8.00 மணி தேவநற்கருணை ஆசீர்**
அருட்பணி A.**அற்புதராஜ்** SC/ST பணிக்குழு & பங்குதந்தை, விக்கரவாண்டி,
**இரவு 9.30 மணிக்கு ஆடம்பர தேர்பவனி.**

**09-08-2018 வியாழன் காலை 6.00 நன்றி திருப்பலி கொடியிறக்கம்.**

**திருவழிபாட்டு நிகழ்வுகள்**

**01-08-2018 முதல் 8-8-2018 வரை**
காலை 5.30 மணி, காலை 8.00, காலை 11.00, திருப்பலிகள் நடைபெறும்.
மாலை 6.00 நவநாள் திருப்பலி, தேர்பவனி.

அன்புடன் அழைக்கும் அருட்திரு. A. **ஆரோக்கிய சகாய செல்வம்**, பங்குதந்தை
மற்றும் அருட்சகோதரிகள் இறைமக்கள். கல்பட்டு. செல் நெ.: 90476 34314

---

## விண்ணக வாழ்வின் 2-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" (யோவான் - 11:25)

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 24-7-2018 செவ்வாய் காலை 11.00 மணிக்கு மணக்கொல்லை, வரதராஜன்பேட்டை, புனித வனத்து அந்தோணியார் ஆலயத்தில் மரித்தோர் திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

**திரு. A. அடைக்கலசாமி**

**தோற்றம்: 30.10.1936**
**மறைவு: 24.07.2016**

பிரிவால் துயருறும்
மகன்: A. **பால் சூசை** ஆசிரியர்.
**மருமகள், பேரப்பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்.**
அரியாங்குப்பம்.

## விண்ணக வாழ்வின் 21-ம் ஆண்டு நினைவு அஞ்சலி

மண்ணில்: 30.11.1934



விண்ணில்: 27.07.1997

**திருமதி. F.A. மரிதெரேஸ் (எ) அன்துவானேத்**

"உமது முன்னிலையில் எனக்கு நிறைவான மகிழ்ச்சி உண்டு. உமது வலப்பக்கத்தில் எப்போதும்பேரின்பம் உண்டு" (தி.பா.16:11)

எங்கள் குடும்பத்தில் மாந்தர்களுள் மாதிரியாய், சுடர் ஒளியாய் வாழ்வின் கடமைகளை மிக பொறுப்புடன் செய்து முடித்து இப்பூவுலகை விட்டு மறு உலகத்திற்கு உம்மிடம் வந்துள்ள திருமதி. F.A. மரி தெரேஸ் (எ) அன்துவானேத் அவர்களின் ஆன்மா விற்கு பாவ பொறுத்தலையும் முடிவில்லா பிரகாசம் நிறைந்த சமாதானத்தில் இளைப்பாற்றியையும் அளித்தருள வேண்டுமென்று இயேசு கிறிஸ்துவின் பெயரால் உம்மை வேண்டுகின்றோம். - ஆமென்.

27.7.2018 அன்று காலை 6.15 மணிக்கு புதுவை புனித ஜென்மராக்கினி அன்னை பேராலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்படும்.

**அன்பின் நினைவாக**
**மகன்கள் மற்றும் குடும்பத்தினர்கள்.**



# உலக மீட்பர் காப்பியம்

பேராசிரியர், முனைவர். **ச.சாமிமுத்து,** திருச்சி.



## 20ஆம் படலம்

ஆண்டவர் மோசேயை நோக்கி, எகிப்து நாடெங்கும் – எகிப்து நாட்டிலுள்ள மனிதர், விலங்கு, வயல் வெளியிலுள்ள பயிர் பச்சை இவற்றின்மேல் – கல்மழை பொழியுமாறு உன் கையை வான்நோக்கி நீட்டு என்றார். மோசே தம் கோலை வானோக்கி நீட்டவே, ஆண்டவர் இடிமுழக்கங்களையும், கல்மழையையும் அனுப்பினார். நிலத்தில் நெருப்புப் பாய்ந்து வந்தது. எகிப்து நாடெங்கும் கல்மழை பெய்வித்தார் ஆண்டவர். கல்மழை பெய்தது – விப.9:22–24.

**6 வைகறையில் வானம்பாடிப் பறவை வழக்கம் போல் மேலும் கீழும் பாடித் தவழும் நேரம், அதற்கு எமனாக வந்த வேடன் ஒருவன் கல்லெறிந்து வீழ்த்தியதைக் கவர்ந்து கொண்டு சென்றான்!**

வான்பார்த்து எழுந்தேகி வானம் பாடி
வாய்நோகக் காலைப்பண் பாடிக் கொண்டே
தான்இருந்து வாழும்மண் பரப்பை நோக்கித்
தலைகீழாய்ப் பாய்ந்துவரப் பார்த்த வேடன்,
கான்நீங்கி வந்தஅவன் கையில் கொண்ட
கல்லொன்றை விட்டெறிந்து பறவை தன்னை,
ஊன்நோக வீழ்த்தியதை எடுத்துக் கொண்டு
உலைவைக்கப் புறப்பட்டான் உண்ணும் நோக்கில்!

**7 காலையில் மலர்ந்து மணம்பரப்பிய மலர்களெல்லாம் அம்மக்களின் வாதைகள் மறைய இறைவனை வேண்டின! அம்மலர்களைப் போன்ற மங்கையரோ தங்கள் புதவர்கள் வாதையுறுவதைப் பார்த்து வருந்தித் துடித்தனர்!**

மக்களெல்லாம் மாத்துயரில் வீழ்ந்தே நோக,
மண்பூத்த மலர்களெலாம் அவர்கள் பார்த்து
நெக்குருக தலையசைத்துப் பரிவே கொண்டு
நிலைமாறும் நாளுக்காய் இறையை வேண்டும்!
தக்கசிறு பிறைநுதலின் மங்கை மார்கள்
தாய்ப்பாச அரவணைப்பில் புதல்வர் ஏந்தி
முக்கலுடன் வெளிவாசல் பக்கம் வந்தே
முகஞ்சோர்ந்து உடல்புண்கள் பார்த்தே நொந்தார்

**8 காலை நேரம் கண்விழித்ததும் மோசே தம் அண்ணனுடன் விரைந்து சென்று பார்வோனைச் சந்தித்தார். அப்பொழுது இனி என்ன நிகழுமோ என்று இயற்கையோ அஞ்சியது! கல்மழை பொழிய கால்வாரிய கார்மேகக் கூட்டங்கள் வான்வெளியில் சினந்தெழுந்து உலவித்திரிந்தன!**

விடிபொழுது முகங்காட்டும் நேரம் பார்த்தே
விழித்தெழுந்த மோசேயோ ஆரோ னோடு,
கடிதேகி எகிப்தரசன் முன்னே நின்றார்,
கடவுளென அவர்சொன்ன சொற்கள் சொன்னார்!
இடியிடிக்கும் கார்மேகம் அந்த வேளை
எங்கெங்கோ இருந்தரசன் இருப்பை நோக்கி,
அடியெடுத்து நடைபோட்டுப் பார்த்துப் பார்த்து
அணுகிவரக் கண்டியற்கை கலங்கிற் றம்மா!

**9 இனிவரவிருக்கும் ஏழாவதாகிய கல்மழை வாதையால், பாலைநிலப்பரப்பிலே மண்ணை வாரிக்கொண்டு விரும்பும் திசைகளிலே வீசித்திரிவது தடைபடுமே என்று, புழுதிக்காற்றின் கூட்டமெல்லாம் புலம்பின!**

மழைகாணாப் பாலைநிலப் புழுதிக் காற்றோ
மாதுயரப் பெருமூச்சு விட்டே ஏங்கும்!
தழைகுலைகள் இல்லாத இங்கும் அந்த
சாபத்தால் கல்மழையும் பொழியும் போது
பிழைபுரியும் பார்வோனின் முனைப்பி னாலே
பெய்மழையால் சுழன்றலைய முடியா தென்றே
இழைத்தந்தக் காற்றதுவும் கலங்கிற் றாங்கே
எப்படித்தான் பாலைநிலை ஆமோ என்றே!

**10 பாலைநிலப் பரப்பிலே ஆண்டுபலவாய் வனோக்கி நிற்கும், மண்செறிவுகளால் இறுகிப்போன மலைகலெல்லாம், இடி மின்னலோடு கூடிய கடும் கல் மழையால் தாங்கள் கரைந்து சிதைய நேருமே என்று கவன்றன!**

வான்நோக்கிப் பல்லாண்டாய்க் கானில் நிற்கும்
மண்மலைகள், "கல்மழைதான் பெய்யும் என்றால்
கான்பார்த்துத் தங்களையே பழிக்கு மாறு
கரைந்தழிய நேர்ந்தாலும் நேரும் என்றே,
ஏன்இந்த இழிவுவரப் பார்வோன் தானும்
இறுகிப்போய் இறையாணை மறுக்கின் றானோ?
தேன்இருக்க வேப்பெண்ணெய் குடிக்கப் பார்த்தே
திகைக்கின்றோம்!" என்றவைகள் வெறுத்தே பேசும்!

# பொது இடத்தில் எப்படி நடந்து கொள்வது

–G. *பொனிபாஸ் ஜூலியன்*, புதுவை–9.



ஒரு சமயம் என் நண்பருடைய குழந்தைக்கு உடல் நலம் சரியில்லாமல் இருந்த நேரத்தில் அவரையும் குழந்தையையும் அழைத்துக் கொண்டு குழந்தை வைத்தியப் பிரிவு (OPD) அழைத்துச் சென்றேன். அங்கு ஒரு சிறப்பான வைத்தியர் இருக்கிறார். அவர் குழந்தைகளுக்கென்றே அந்த வைத்தியத்தில் சிறப்பு பயிற்சிப் பெற்றவர், நோயின் தன்மையை அறிந்து விரைவில் குணமடைய செய்வார். அவரை குழந்தைகள் கைராசி டாக்டர் என்றும் கூறலாம். இவ்வளவு சிறப்பு குணங்கள் இருந்தும் அவரிடத்தில் ஒரு சிறிய மனநிலை, பல சமயங்களில் மற்றவரை பாதிக்கச் செய்தது. அதாவது குழந்தைகளை பெற்றோர்கள் சுகாதார முறைப்படி வளர்க்காதபோதும், தவறு செய்த போதும், OPD யில் பலபேர் மத்தியில் அவர்களை கண்டிப்பார். இதை மறைமுகமாக செய்தால் சிறப்பானதாக இருக்கும். ஆனால் அவர் அப்படி செய்வதில்லை.

நானும் என் நண்பரும் OPD க்கு சென்றோம். ஒரே கூட்டம் அவர்கள் மத்தியில் ஒரு தந்தை தன் பிள்ளையின் நோய் தன்மையை குறித்து மருத்துவரிடம் பேசிக் கொண்டிருந்தார். உடனே டாக்டர் அந்த தந்தையை நோக்கி உங்கள் குழந்தைக்கு அடிக்கடி என்ன தண்ணீர் கொடுக்கிறீர்கள் என்று கேட்டார். அதற்கு குழந்தையின் தகப்பனார் ஜீரகம் கலந்த பிராண்ட் தண்ணீரை கொடுப்பதாக கூறினார். இதை கேட்டவுடன் டாக்டருக்கு ஒரே கோபம். எப்படி அந்தத் தண்ணீரை குழந்தைக்கு தினமும் கொடுக்கலாம், இந்த சின்ன விஷயம் கூட உங்களுக்குத் தெரியாதா என்று பலபேர் மத்தியில் ஆவேசமாக கூறினார். கூறியது மட்டுமல்லாமல் சட்டென்று எழுந்து அங்கே வைக்கப்பட்டுள்ள ஒரு பெரிய மருத்துவ புத்தகத்தை திறந்து அதை குழந்தையின் தந்தையிடம் கொடுத்து படிக்கச் சொன்னார். மேலும் அதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றும் கேட்டார். அங்கு சுற்றியுள்ள அனைவருக்கும் ஒரே அதிர்ச்சி. என்ன! குழந்தையினுடைய அப்பாவுக்கு டெஸ்ட் வைக்கிறாரா என்று வியப்போடு பார்த்தார்கள். ஆனால் குழந்தையினுடைய தகப்பனோ தன்னை சற்றும் அலட்டி கொள்ளாமல் டாக்டரிடம் இருந்து அந்த மருத்துவ புத்தகத்தை வாங்கி நிதானமாக கூறிய பதில் டாக்டரை மட்டுமல்ல அனைவரையும் வியக்கச் செய்தது.

தந்தை கூறினார், இந்த புத்தகத்தில் கூறப்பட்டுள்ள செய்திகள் அனைத்தும் தெரிந்திருந்தால் நான் ஏன் என் குழந்தையை உங்களிடம் கொண்டு வந்து காட்டுகிறேன். அதுமட்டுமல்ல நானே என் குழந்தைக்கு வைத்தியம் செய்திருப்பேன். மேலும் நீங்கள் அமர்ந்திருக்கும் நாற்காலியில் நானே அமர்ந்து கொண்டு நானே வைத்தியம் பார்ப்பேன் என்று கூறினார். எனக்கு தெரியாததினால்தான் உங்களிடம் என் குழந்தையை கொண்டு வந்து காண்பிக்கிறேன், நீங்கள் ஒரு பெரிய மருத்துவர் எல்லோருடைய முன்னிலையிலும் என்னை தலைகுனிய செய்து விட்டீர்கள் என்று கூறினார். இதை கேட்ட டாக்டர் கண் கலங்கினார். இது அவருடைய மனமாற்றத்திற்கு ஒரு பாடமாக அமைந்திருந்தது. பல சமயங்களில சிலர் இப்படிதான் நடந்து கொள்வார்கள். பொது இடத்தில் எப்படி பேச வேண்டும் என்பது ஒரு கலை. அதை தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் அவமானத்தை சந்திக்க நேரிடும். படித்தால் மட்டும் போதாது, சிறந்த பண்புகளை வளர்த்துகொள்ள வேண்டும். நம்மை மற்றவர் பார்க்கும்போது நம்மிடம் கல்வித் தகுதிகள் அனைத்தும் அவர்களுக்குத் தெரியாது, அவர்களுக்கு தெரிவதெல்லாம் நம்மிடம் உள்ள சிறந்த பண்புகள்தான். குறைவாக பேசுவோம்; அதிகமாக கேட்போம். மற்றவரை புண்படுத்தாமல் பேச பழகிக் கொள்ள வேண்டும். கடவுளுடைய கிருபையை நாடுவோம். அவர் நமக்கு பக்கபலமாக இருப்பார். ●

## விண்ணக வாழ்வின் 30-ஆம் நாள் நினைவு அஞ்சலி

**"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"** - (யோவான்.11:25)



**ஜெபம்**

இரக்கம் மிகுந்த இயேசுவே! இறைவா! உமது அன்பு மகளாக எங்கள் குடும்பத்தின் நேசமுள்ள தலைவியாகவும், ஒளியாகவும், பாசமிக்கவராகவும் எங்களை நேசித்து எங்களுடன் வாழ்ந்து உம் திருப்பாதம் அடைந்த உம் அடியார்

**திருமதி. பாத்திமாராணி செல்வநாதன்**

அவர்கள் ஆத்துமத்திற்கு நித்திய இளைப்பாற்றியையும் முடிவில்லா பிரகாசத்தையும் தந்தருளும் சுவாமி ஆமென்.

- *கர்.மங்.திரி.*

**பிரிவால் துயருறும்**

கணவர்: **மரி ஜோசப் செல்வநாதன்**
மகள்கள்: **மரி ஆன்ழ் சுந்தரி செல்வநாதன்**
**சகாயமரி சில்வியா தனியேல்**
மருமகன்: **தெஸ்மோ தனியேல்**
பேரன் : **ழான் பத்திஸ்த் நித்தின் தனியேல்**
பேத்தி : **ஆந்திரேயா ஜெயந்தி தனியேல்**
**எலிசபெத் கிளேரா தனியேல்**

### *திருமதி.* பாத்திமா ராணி செல்வநாதன்

பிறப்பு: **09-06-1955** இறப்பு: **01-07-2018**

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 30–07–2018 திங்கட்கிழமை மாலை 6.00 மணிக்கு புதுவை, **திரு இருதய ஆண்டவர் பசிலிக்காவில்** மரித்தோர் பாடல் திருப்பலி நிறைவேற்றப்படும்

---



## விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

இரக்கமிகும் இறைவா! நீர் இவ்வுலகிலிருந்து அழைத்துக்கொண்ட உமது அடியார் அன்துவானேத் ராயப்பா அவர்களை நினைவு கூர்ந்தருளும். இவர் உம் திருகுமாரன் சாயலைத் தாங்கி அவரோடு ஒன்றாய் இணைக்கப்பட்டதுபோல உயிர்ப்பிலும் இருக்க செய்தருளும். எல்லா புகழும் மாட்சியும் என்றேன்றும் உமக்கு உரியதே - ஆமென்.

**பிரிவால் துயருறும்**

**கணவர்:திரு.அன்துவான் ராயப்பா**
**பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்.**

### சரோஜா என்ற அன்துவானேத் ராயப்பா

பிறப்பு: **27-07-1937** இறப்பு: **03-08-2017**

**"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"** - (யோவான்.11:25)

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 03-08-2018 வெள்ளி காலை 6.15 மணிக்கு, சென்னை, அயனாவரம், தோன்போஸ்கோ ஆலயத்திலும், காலை 6.00 மணிக்கு புதுவை நெல்லித்தோப்பு, விண்ணேற்பு அன்னை ஆலயத்திலும் பாடற் திருப்பலி நிறைவேற்றப்படும்.

**மரித்த விசுவாசிகளின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய அமைதியில் இளைப்பாறுவார்களாக.**

## விண்ணக வாழ்வின் 18-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் : 16-09-1955



மறைவு : 05-08-2000

### திருமதி. P. அன்னமரி

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - (யோவான்.11:25)

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 5.8.2018 ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு கோவிலானூர், புனித கர்மேல் அன்னை ஆலயத்தில் நடைபெறும் திருப்பலியில் பங்கேற்று இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**பிரிவால் துயருறும்**

கணவர் : R. **பால் பிரான்சீஸ்,** Rtd. H.M.
மகன்கள் : **P.** ஜெரால்டு, **P.** ஹென்றி
மகள் : **P.** அனித்தா
மருமகன் : **V.**ஜார்ஜ் பெர்னாண்டஸ்
மருமகள்கள் : **D.**சாந்தினி, **A.**சாந்தி சகாயராணி
மற்றும் பேரப்பிள்ளைகள்.
கோவிலானூர்.

## விண்ணக வாழ்வின் 4-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 14-08-1946



இறப்பு: 09-08-2014

### திரு. R. மரிய ஆல்பர்ட்

## விண்ணக வாழ்வின் 4-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம்: 29-09-1946



மறைவு: 11-06-2014

### திருமதி. J. மிஸ்லின் ஆல்பர்ட்

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - (யோவான்.11:25)

இவர்களது ஆன்ம இளைப்பாற்றிக்காக 5-8-2018 ஞாயிற்றுக் கிழமை காலை 7.30 மணிக்கு கோவிலானூர், புனித கர்மேல் அன்னை ஆலயத்தில் நடைபெறும் திருப்பலியில் பங்கேற்று இவர்களது ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**பிரிவால் வருந்தும்**
**உடன்பிறந்தோர்:**
திரு. **R. பால் பிரான்சிஸ்**
அருட்திரு. **R. ஜோசப்ராஜ்**
திருமதி. **R.D. எலிசபெத்-சக்கரையாஸ்**
**மற்றும் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.**
கோவிலானூர்.

---

பிறப்பு: 01-07-1941



இறப்பு: 31-07-2014

## Eugénie RAYER

## விண்ணக வாழ்வின் நான்காம் ஆண்டு நினைவு அஞ்சலி

*"உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" (யோவான்.11:25)*

எங்களை உன் உயிரினும் மேலாய்
பாதுகாத்தாய் நீ!
பூவுலகில் அனைத்துக் கடமைகளையும்
சிறப்பாய் செய்தாய் நீ!
உன்னை நாடி வந்தவர் அனைவருக்கும்
உதவினாய் நீ!
அவர்கள் மகிழ்ச்சியில் இன்பத்தை கண்டாய் நீ!
இறைவன் திருவடி சேர்ந்தாய் நீ!
உன் பசுமை நினைவுகளில் துயரத்துடன் வாழும்!

**பிரிவால் துயருறும்**
**கணவர், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்,**
**மற்றும் குடும்பத்தினர்.**
புதுவை.

நினைவுத் திருப்பலி: புனித ஜென்ம இராக்கினி அன்னை பேராலயத்தில், **31-07-2018** அன்றும் புதுவையில் உள்ள அனைத்து ஆலயங்களிலும் அன்னாரது ஆன்ம இளைப்பாற்றிக்காக திருப்பலி நிறைவேற்றப்படும். இதை கண்ணுறும் அனைவரும் இவரது ஆன்ம சாந்திக்காக செபிக்க வேண்டுகிறோம்.

# விண்ணக வாழ்வின் முப்பதாம் நாள் நினைவு அஞ்சலி











மண்ணகத்தில்
11-09-1946

விண்ணகத்தில்
28-06-2018

## திருமதி. கல்பனா அருள் எட்வர்ட்

*"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" – யோவான் 11:25*

**ஜெபம்**

என் இறைவா! நான் உம்மீது தாகம் கொண்டுள்ளேன். உம் ஆற்றலையும், மாட்சி யையும் காண விழைந்து உம் தூயகம் வந்து உம்மை நோக்குகின்றேன். உமது திருமுக ஒளியை என்மீது வீசச் செய்யும். - ஆமென்.

**திருமதி. கல்பனா அருள் எட்வர்ட்** அவர்கள் ஆத்தும இளைப்பாற்றிக்காக நெல்லித்தோப்பு, புனித விண்ணேற்பு அன்னை ஆலயத்தில் 27-07-2018 அன்று காலை 6.00 மணி திருப்பலியும், தூய இதய ஆண்டவர் பசிலிக்காவில் காலை 5.30 மணி திருப்பலியும், புதுவை புனித ஜென்ம ராக்கினி அன்னை ஆலயத்தில் காலை 6.15 மணித் திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்படும். இத்திருப்பலியில் கலந்துகொண்டு இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக ஜெபிக்க கேட்டுக் கொள்கிறோம்.

பிரிவால் துயருறும்

கணவர்: M.S. **எட்வர்ட்**

**மகள்கள்-மருமகன்கள்,**

**மகன்கள்-மருமகள்கள்**

**பேரப்பிள்ளைகள், மற்றும் உறவினர்கள்,**

**சகோதர, சகோதரிகள்.**

புதுச்சேரி - 5.

**முன்னறிவிப்பு ஏதுமின்றி, திருத்தந்தை நடத்தி வைத்த திருமணம்:** ஜூலை 14, கடந்த சனிக்கிழமையன்று, சுவிஸ் மெய்க்காப்பாளர் ஒருவருக்கு வத்திக்கானில் நடைபெற்ற திருமணத் திருப்பலிக்கு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், எவ்வித முன்னறிவிப்பும் இன்றி சென்று, அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்திய நிகழ்வு, இத்திங்கள் மாலை வெளியானது. சுவிஸ் மெய்க்காப்பாளர் ஒருவருக்கும், பிரேசில் நாட்டைச் சேர்ந்த இளம் பெண்ணுக்கும் வத்திக்கான் நகருக்குள் அமைந்துள்ள புனித ஸ்தேவான் சிற்றாலயத்தில் திருமணத் திருப்பலி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இத்திருமணத் திருப்பலியை நிகழ்த்த, பிரேசில் நாட்டவரான அருள்பணி ரெனாத்தோ தோஸ் சாந்தோஸ் அவர்கள், சிற்றாலயத்தின் சக்ரீஸ்தில் நுழைந்த வேளையில், அங்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஏற்கனவே, அவருக்காகக் காத்திருந்ததைக் கண்டு, அவர் ஆனந்த அதிர்ச்சி அடைந்ததாகக் கூறினார். திருமணத் திருப்பலியை நிகழ்த்த திருத்தந்தை பீடத்திற்குச் சென்றபோது, மணமக்களும், கூடியிருந்தோர் அனைவரும் தாங்கள் காண்பதை நம்பமுடியாமல் திகைத்து நின்றனர். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன் ஆடுகளின்மீது உண்மையான அக்கறை கொண்ட மேய்ப்பர் என்பதை இந்த ஆனந்த அதிர்ச்சி தரும் நிகழ்வு தனக்கு உணர்த்தியது என்று அருள்பணி தோஸ் சாந்தோஸ் அவர்கள் வத்திக்கான் செய்திக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டார். திருமணம் என்ற அருளடையாளத்தின் மீது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கொண்டிருக்கும் ஒப்பற்ற மதிப்பையும், திருமண வாழ்வில் கிறிஸ்துவை மையப்படுத்த வேண்டும் என்ற அவரது விருப்பத்தையும் இந்த நிகழ்வு தெளிவாக உணர்த்துகிறது என்று அருள்பணி தோஸ் சாந்தோஸ் அவர்கள் தன் பேட்டியில் எடுத்துரைத்தார். - வத்.வானொலி.

**புனித அன்னை தெரேசா சபை உலகத் தலைவரின் விளக்க அறிக்கை:** புனித அன்னை தெரேசாவால் நிறுவப்பட்ட பிறரன்பு மறைப்பணி அருள் சகோதரிகள் சபை, ஆதாரமற்ற பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியிருப்பது வேதனை தருகிறது என்று, இச்சபையின் உலகத் தலைவர், அருள்சகோதரி மேரி பிரேமா அவர்கள் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அன்னை தெரேசா சபை அருள் சகோதரிகள், குழந்தை விற்பனையில் ஈடுபட்டுள்ளனர் என்ற பொய்யான குற்றச்சாட்டுடன், ராஞ்சியில் பணியாற்றி வந்த அருள் சகோதரி கொன்சிலியா அவர்கள் கைது செய்யப்பட்டார். இது குறித்து, முழு விவரங்களை வெளியிட்டு, தலைமைச் சகோதரி பிரேமா அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில், தங்கள் சபையின் கன்னியர் எவ்வகையிலும் தவறுகள் செய்யவில்லை என்றும், தங்களிடம் பணியாற்றி வந்த அனிமா இந்துவார் என்ற பெண்மணியின் தவறால் தாங்கள் இந்த குற்றச்சாட்டுகளைச் சந்திக்க வேண்டியுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது. ராஞ்சியிலும், சுற்றுப்புறங்களிலும் திருமணம் ஆகாமல் தாயாகும் இளம்பெண்களுக்கு அடைக்கலம் அளிக்கும் நிர்மல் ஹிருதய் (Nirmal Hriday) இல்லத்திற்கு, அரசு அதிகாரிகள் அண்மையில் வந்து, அங்கு நடைபெறும் பணிகளைப் பாராட்டியுள்ளதையும் தலைமைச் சகோதரி பிரேமா தன் அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார். சமுதாயத்தால் புறந்தள்ளப்பட்டுள்ள மிகவும் வறிய மக்களிடையே 1950ம் ஆண்டு முதல் பணிபுரிந்து வரும் அன்னை தெரேசா சபையின் அருள்சகோதரிகள், தற்போது 139 நாடுகளில், 760 இல்லங்கள் வழியே பணியாற்றி வருகின்றனர் என்றும் இந்தியாவில், இச்சபையினர் 244 இல்லங்கள் வழியே பணியாற்றி வருகின்றனர் என்றும் அருள்சகோதரி மேரி பிரேமா அவர்களின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. சமுதாயத்தில் மிகவும் வறுமைப்பட்டோரிடையே பணியாற்றுவதில் தங்கள் சபையினர் இன்னும் முழுமையாக தங்களையே அர்ப்பணிக்கின்றனர் என்றும், அண்மைய நிகழ்வுகளால் பாதிக்கப்பட்டுள்ளோர் அனைவருக்கும் ஆண்டவரின் பாதுகாப்பு கிடைக்க தான் வேண்டிக்கொள்வதாகவும் அருள்சகோதரி பிரேமா அவர்கள் தன் அறிக்கையின் இறுதியில் குறிப்பிட்டுள்ளார். - AsiaNews / வத்.வானொலி.

**நிக்கராகுவா அமைதிக்காக திருத்தந்தையின் பெயரால் விண்ணப்பம்** நிக்கராகுவா நாட்டில் அரசு மேற்கொண்டுள்ள அடக்குமுறைகளை கைவிட்டு, உரையாடலை மேற்கொள்ளவேண்டும் என்று, அந்நாட்டில் பணியாற்றும் திருப்பீடத் தூதர், பேராயர் Waldemar Stanislaw Sommertag அவர்கள், திருத்தந்தையின் பெயரால் விண்ணப்பம் ஒன்றை விடுத்துள்ளார். சரியாக மூன்று மாதங்களுக்கு முன், அதாவது ஏப்ரல் 18ம் தேதி முதல், நிக்கராகுவா நாட்டில் நிகழ்ந்துவரும் வன்முறைகளால் இதுவரை 360 பேர் இறந்துள்ளனர் என்பதைச் சுட்டிக்காட்டியுள்ள பேராயர் Sommertag அவர்கள், மக்களின் உயிர்களைப் பறிப்பதால் அமைதியை உருவாக்க முடியும் என்று நினைப்பது தவறு என்று கூறியுள்ளார். ஜூலை 9, கடந்த திங்களன்று, நிக்கராகுவா அரசுத் தலைவருக்கு எதிராகப் போராடியவர்களில் சிலர், திரியாம்பா நகர் புனித செபாஸ்டின் பசிலிக்காவில் அடைக்கலம் புகுந்ததையடுத்து, அக்கோவிலை அரசின் ஆதரவு படையினர் சூழ்ந்தனர். அம்மக்களை விடுவிக்கச் சென்ற நிக்கராகுவா கர்தினால் Leopoldo Jose Brenes Solorzano அவர்களையும், திருப்பீடப் பிரதிநிதி, பேராயர் Waldemar Sommertag மற்றும் துணை ஆயர் Sillvio Jose Baez Ortega ஆகிய மூவரையும் அரசு ஆதரவுக் குழுவினர் தாக்கினர். - வத்.வானொலி.




வெற்றிகரமான 3-ம் ஆண்டு

புனித ஐரோப்பிய பயணம்(14இரவு/15பகல்)

இத்தாலி-வாட்டிகன்-சுவிட்சர்லாந்து-பிரான்ஸ்-போர்ச்சுகல்-ஸ்பெயின்

- சென்னை விமான நிலையத்தில் இருந்து சென்று மீண்டும் சென்னை விமான நிலையத்திற்கே திரும்பி வர. A/c சொகுசு பேருந்து பயணம்.3வேளை உணவு.
- 3*& 4*Hotel Stay, Visa, 69 வயது வரை பயணக் காப்பீடு மற்றும் அனைத்து செலவுகளும் உட்பட. (தனிப்பட்ட செலவுகள் தவிர்த்து)

- தமிழ்நாடு, புதுவையில் இருந்து இதுவரை 2000க்கும் மேற்பட்ட திருப்திகரமான பயணிகளை புனிதபயணம் மற்றும் இதர நாடுகளுக்கு அழைத்து சென்றுள்ளோம்.
- குடும்ப உறுப்பினர்களை அழைத்து செல்வதை போன்ற பாதுகாப்பான அன்பான பயணம்.
- கூடுதல் இடங்களை பார்க்க கூடிய வாய்ப்பு
- அன்பான தந்தைகளின் Daily Mass
- மற்றும் பல....

பயணக்கட்டணம் : Rs. 1,99,000/- நபருக்கு

பயணத்தேதி : 24 செப்டம்பர் -8 அக்டோபர் 2018

முன்பதிவு மற்றும் விபரங்களுக்கு

SANGAMAM LEISURE MANAGEMENT PVT LTD.,
No.56, 1st Floor, Mission Street, Pondicherry - 605 001.
Ph: 0413-4202322/24, Cell : 95970 82240, 98941 02518
www.sangamamleisure.com, E-mail: sales@sangamamleisure.com
Fb: sangamamleisure


Printed and Published on behalf of Most Rev. Dr. A. ANANDARAYAR, Archbishop of Pondicherry & Cuddalore, by Rev. Fr. C.ANTONI ROCHE, Manager, MISSION PRESS & Editor, Sarva viabi, 196, Cathedral Street, Pondicherry - 605 001.